1987 ஏப்ரல் 23]

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின் சார்பாக மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் தொலைக்காட்சி பெட்டிகளை வாங்குவதற்கு அவர்களுடைய நிதியிலேயிருந்து வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்கிற ஒரு செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பள்ளிக் கூடங்கள் முடிந்து மாலையிலே மாணவர்கள் வீட்டுக்குச் சென்று விடுகிறார்கள். இந்தத் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கு என்றே தனியாக இந்த இந்த நேரங்களில் அது இயக்கப்படும் என்று ஒரு நேரத்தை வரையறுத்துக் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தொலைக்காட்சி அமைப்பு-மைய அரசினுடைய பொறுப்பிலே இருக்கின்ற தொலைக்காட்சி அமைப்பு—செயல்படுகின்ற முறையிலேயிருந்து, பள்ளி நேரங்களில் எந்தவிதமான பலனையும் மாணவர்களுக்கு அளிக்காது என்பதுதான் அரசினுடைய கருத்து, மற்ற நேரங்களாக இருந்தாலும் கூட. மாணவர்களுக்குக் கல்விக்குப் பலனைத் தரக்கூடிய அளவிற்கு வேண்டிய ப்ரொக்ராமை அவர்கள் கொண்டு வருவார்களேயானால் அப்பொழுதுதான் பலன் உள்ளதாக இருக்கும். தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தந்துவிட்டு, அந்தத் தொலைக்காட்சி மூலமாக குழந்தைகளுக்கு, மாணவர்களுக்கு வேண்டிய படிப்பினைச் சொல்லக்கூடிய, தேவையான படிப்புகளைச் சொல்லித் தரக்கூடிய கேசட்டுகளை மாநில அரசே தயாரித்துக் கொடுப்பது குறித்து நாம் ஆய்ந்து வருகிறோம். மைய அரசு அந்த முயற்சியில் இதுகாறும் எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை.

நத்தம் தொகுதி சானார்பட்டி ஒன்றியம், கோணப்பட்டி,
அருகில் பாலாற்றில் அணைக்கட்டு

470—(*வினா எண். 6907) திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம், கோணப்பட்டி அருகில் பாலாற்றின் குறுக்கே ஒரு நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் பல வருடங்களாக ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்கான தோராய மதிப்பீடு 1976—77-ல் 18.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டது. பொருளாதார ரீதியில் சிக்கன

மற்றதென்ற காரணத்தால்இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது என்றாலும் தற்போது மீண்டும் ஆய்வுக்கு எடுக்கப்பட்டு தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவரவர்களே, இத்திட்டம் பற்றி பல ஆண்டுகளாக இந்தச் சட்டமன்றத்திலே பேசப்பட்டு' ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆனால் இப்பொழுது கனம் அமைச்சரவர்கள் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு எடுக்கப்பட்டு நடைமுறைக்கு வருமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. காரணம்அங்கே மழைக் காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து தண்ணீரெல்லாம்வீணாக சமுத்திரத்திற்கு ஓடிக்கொண்டிருக்கிறது அதைத் தேக்கி விவசாயிகளுக்குப் பலன் தரும் அளவிலே கனம் அமைச்சரவர்கள் அதை மறுபடியும் விரைவிலே கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை 1976--77-லே ஆய்வு செய்த நேரத்திலே பொருளாதார ரீதியில் இது சரியில்லை என்று சொல்லி அப்பொழுது அதைக் கைவிட்டிருக்கிறார்கள். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் தொடர்ந்து அதை வற்புறுத்தி வருகின்ற காரணத்தால்தான் மறுபடியும் இப்பொழுது இருக்கின்ற நிலைமைக்கேற்றாற்போல அதை ஆய்வு செய்து உடனடியாக அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்ற உணர்வை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கை வருகின்ற நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவரவர்களே, எனது தொகுதி கரந்தலை, அழகர் மலை, சிறுமலை போன்ற மலைகள் நிறைந்த ஒரு மலைப்பிரதேசமாக இருக்கிறது. அங்கே திருமணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே சங்குசக்கரப்பாறை அருகில் ஒரு அணை கட்டுவது சம்பந்தமாக பல ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்டது. அதைப்போன்று அழகர் மலையிலிருந்து வருகிற பெத்தாம்குளியில் புதுக்கோட்டை அருகில் ஒரு அணை கட்டுவது சம்பந்தமாக பல ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதைப் போன்று செந்துறைக்குப் பக்கத்தில் பஞ்சந்தாங்கி என்ற இடத்தில் அணை கட்டுவது சம்பந்தமாக பல ஆண்டுகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. காந்த மலை அருவி பக்கத்திலும் மனக்காட்டூர் பக்கத்திலுள்ள ஐயனார் அருவியிலும் ஆய்வு செய்யப்பட்டது. பல ஆண்டுகளாகியும் நடைமுறைக்கு வரவில்லை. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தஆண்டு இந்த அணையைக் கட்டுவதற்கு உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்தத் திட்டங்கள் எந்த அளவில் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியவில்லை. நான் அதிகாரிகளிடம் பேசி, வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அதிகாரிகளுக்குச் சொல்கிறேன். பல ஆண்டு காலம் என்று சொல்லுகிறபோது, ஓடையாக இருந்தாலும் சரி அல்லது ஆறாக இருந்தாலும் சரி, தண்ணீர் வருகின்ற நேரத்தில் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் 'கேஜிங்' எடுத்து, தண்ணீர் வருகின்ற அளவைப் பார்த்து திட்டங்களைத் தயாரிக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் கால்வாய்களை சீரமைத்தல்

471—(*வினா எண். 8003) திரு. எப். எம். இராசரத்தினம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் கடைவரம்பு பகுதி விவசாயிகள் நலன் கருதி கால்வாய்களை பழுதுபார்க்கவும், மதகுகள் அமைக்கவும் புதிய திட்டங்கள் பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கோதையாறு பாசன முறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் கடைவரம்பு கால்வாய்களை பழுதுபார்க்கவும் மதகுகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளன.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் பேச்சிப்பாறைத் தண்ணீரைத் தான் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோதையாறு சீரமைப்புத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். உருவாக்கியிருக்கிற கோதையாறு சீரமைப்புத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ? எப்போது இந்தத் திட்டப்பணி தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 48,98,00,000 ரூபாய்க்கு ஒரு திட்டம் இப்போது தீட்டப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் வந்தவுடன் திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. எப். எம். இராசரத்தினம் : தலைவரவர்களே, இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடைவரம்புப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள அந்த உணர்வினைக் கருத்திற்கொண்டு